செ.வெ.எண் 502/2017 நாள் - 10/10/2017

பத்திரிக்கைச்செய்தி

## மாணவர்கள் தங்களது திறமைகளையும், திறனையும் வெளிப்படுத்த காஞ்சிபுரம் மாவட்ட அளவில் திறனாய்வு போட்டிகள் நடத்துதல்

தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்களது தொழில்திறன்களையும், திறமையையும் வெளிப்படுத்தும் வகையில் மாநில அளவில் திறனாய்வு போட்டிகள் நடத்தப்படும் என 2016 - 2017 பட்ஜெட் கூட்டத்தொடரின் போது மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களால் சட்ட மன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இப்போட்டிகளை நடத்த தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அரசாணை எண்: 31, நாள்: 08.03.2017ன் மூலம் அரசாணை வெளியிடப்பட்டது.

நமது மாநிலத்தில் உள்ள மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டவும், தொழிற்சாலைகளும், கல்வி நிறுவனங்களும் நவீன தொழில்நுட்பம் சார்ந்த எண்ணங்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் உருவாக்க ஒரு களத்தினை ஏற்படுத்தவும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் மாநில அளவிலான திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இதன் முதற்கட்டமாக மாவட்ட அளவில் இத்திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட்டு அதில் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்படும் படைப்பு மாநில அளவில் கலந்து கொள்வதற்கு மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்படும். இதனடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 20.10.2017 அன்று காலை 11.00 மணி அளவில் திறனாய்வு போட்டிகள் பக்தவச்சலம் பல்தொழிற்நுட்ப கல்லூரியில் நடைபெற உள்ளது. இப்போட்டிகள் இயந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய மூன்று துறைகளில் நடத்தப்பட உள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்போர் கீழ்காணும் வகைகளில் பங்கேற்கலாம்.

1. பொறியியல் கல்லூரிகள்/ பல்தொழிற்நுட்ப கல்லூரிகள்/ பல்கலை கழகங்கள்/ கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்/ தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களாக பயிற்சி பெறுவோர்.

2. தொழிற்சாலைகளில் பணிபுரிவோர்
3. குறுகிய கால பயிற்சிகள் மூலம் திறன் பெற்றோர் மற்றும் அமைப்பு சாரா தொழில்களில் பணி அனுபவம் பெற்ற திறனுடையோர்

இப்போட்டிகளில் பங்கேற்பவர்கள் கீழ்கண்ட இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

www.skilltraining.tn.gov.in

இப்போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் பெறுவோருக்கும் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும். மேலும் இவர்கள் மாநில அளவில் வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான திறனாய்வு போட்டிகளில் கலந்து கொள்ள தகுதியுடையவர் ஆவர். இப்போட்டிகளை பார்வையிட தமிழகத்திலுள்ள பெரிய தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்கள் வருகை தர உள்ளனர். எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மாணவர்கள்/ தொழிற்சாலை பணியாளர்கள்/ தொழில் பழகுநர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் இப்போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளையும், திறனையும் வெளிப்படுத்துவதன் மூலம் நல்ல வேலை வாய்ப்பினை பெறலாம் என்பதால் இப்போட்டிகளில் அனைவரும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.